

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப அவர்கள், காவல்துறை கண்காணிப்பாளர் திரு.ஜி.தர்மராஜன் இ.கா.ப, மாவட்ட வன அலுவலர் திரு.வி.விஷ்மிஜூ விஷ்வநாதன் இ.வ.ப ஆகியோர்கள் முன்னிலையில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக அமைக்கப்பட்ட மலர் கண்காட்சியினை நாகர்கோவில் மகளிர் கிறிஸ்தவ கல்லூரியில் இன்று (10.09.2016) திறந்து வைத்து, பார்வையிட்டார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எஸ்.இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்:624 நாள்:10.09.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப அவர்கள், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக மலர் கண்காட்சியினை திறந்து வைத்து, கருத்தரங்கத்தில் கலந்து கொண்டார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப அவர்கள், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக,தேசிய தோட்டக்கலை இயக்கம் 2015 - 2016 திட்டத்தின் கீழ் நடைபெற்ற மாவட்ட அளவிலான மலர் கண்காட்சியினை நாகர்கோவில் மகளிர் கிறிஸ்தவ கல்லூரியில் இன்று (10.09.2016) திறந்து வைத்து,பார்வையிட்டு தெரிவித்ததாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக மலர் கண்காட்சி மற்றும் மலர், காய்கறி கருத்தரங்கம் இன்று (10.09.2016) மற்றும் நாளை (11.09.2016) நடைபெறுகிறது. இதில் நமது மாவட்டத்தில் மலரும் பூக்கள் மற்றும் காய்கறி வகைகள் ஆகியவற்றை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக நமது மாவட்டத்தில் இருந்து பெங்களூர், மதுரை, சென்னை, திருவனந்தபுரம் போன்ற இடங்களுக்கு விதவிதமான பூக்கள் அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் அந்தூரியம் மற்றும் ஹெலிகோனியா சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து முனைவர்.அசோக்குமார் அவர்களும், கிளாடியோலஸ், ஜெர்பிரா, ஆர்கிட்ஸ் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து முனைவர்.பினிசுந்தர் அகிய பேராசிரியர்களால் மலர் சாகுபடி கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. மேலும் மாடித்தோட்டம் அமைத்தல் குறித்து முனைவர்.மணிவண்ணன் அவர்களும், பசுமை மற்றும் நிழல்குடில்களில் காய்கறி சாகுபடி குறித்து முனைவர்.விஜீலன் ஹாரிஸ் அகிய பேராசிரியர்களால் காய்கறி சாகுபடி கருத்தரங்கம் நடைபெறவுள்ளது.

எனவே விவசாயிகளாகிய நீங்கள், பேராசிரியர்கள் வழங்கும் அறிவுரைகளை பின்பற்றி அதிக மகசூல் செய்து, லாபம் பெற வேண்டுமென தெரிவித்தார். பின்னர் மலர் சாகுபடி தொழில்நுட்ப கையேடினை வெளியிட்டார்.

இக்கருத்தரங்கு மற்றும் கண்காட்சியில் கன்னியாகுமரி மற்றும் பேச்சிப்பாறை அரசு தோட்டக்கலைப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் பழச்செடிகள் மற்றும் வாசனைத் திரவியப் பயிர்களின் நடவுச் செடிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பாக மலர் கண்காட்சியினை திறந்து வைத்து பல்வேறு விதமான மலர்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததை பார்வையிட்டார்.

நிகழ்சியில் காவல்துறை கண்காணிப்பாளர் திரு.ஜி.தர்மராஜன் இ.கா.ப, மாவட்ட வன அலுவலர் திரு.வி.விஷ்மிஜீ விஷ்வநாதன் இ.வ.ப, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எஸ்.இளங்கோ, மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) திரு.நிஜாமுதின், வேளாண்மை இணை இயக்குநர் திரு.என்.இளங்கோ, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.எம்.அசோக் மேக்ரின், வேளாண்மைத்துறை துணை இயக்குநர் திரு.வி.ஆர்.சுரேஷ் ஜோஸ், செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்துறை) திரு.பி.ஆனந்தராஜா, பேராசிரியர்கள் முனைவர்.ஜே.ஜேன் சுஜாதா, முனைவர்.ஆர்.சொர்ணபிரியா, முனைவர்.அ.ஜெயா ஜாஸ்மின், திரு.ஜான்விஜீ பிரகாஷ் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---------------------------------------------------------------------------------------------------------

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கன்னியாகுமரி மாவட்டம்.